**செ. கு. எண்: 023** **நாள்: 26.02.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.2.2020</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி திருமதி ஒப்பாயி, திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. ராமமூர்த்தி மற்றும் திரு. ராமமூர்த்தி என்பவரின் மகன் திரு. குணசேகரன் ஆகிய மூன்று நபர்களும் விவசாய நிலத்தில் உரம் தெளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மங்கலம் குறுவட்டம் வடபட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி புளுகாயம்மாள் என்பவரின் மகன் செல்வன் மாரிச்செல்வம் என்பவர் எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் மற்றும் நகரத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு. சண்முகம் மற்றும் அவருடைய மகன் செல்வன். முகேஸ்வரன் ஆகிய இருவரும் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், ஜம்புகுளம் மதுரா தொண்டமாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் திரு. பிரேம்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை கிராமத்தைச் சேர்ந்த திருமதி குட்டி என்பவரின் கணவர் திரு. சந்துரு என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், மனக்காவலம்பிள்ளை நகரைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவரது மகன் திரு. ஆம்ஸ்ட்ராங் சாமுவேல் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், ஒத்தக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டியன் என்பவரின் மகன் திரு. பிரசாத் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருமீயச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தர்ராஜன் என்பவரின் மகன் திரு. பாலசுப்ரமணியன் என்பவர் மேற்கூரை அமைக்கும் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், ராஜன்நகர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையகவுடர் என்பவரின் மகன் திரு. முத்துராஜ் என்பவர் விவசாய நிலத்தில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உல்லத்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. லெட்சுமணன் என்பவரின் மனைவி திருமதி மணி, திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. குமார் மற்றும் திரு. கண்டமுத்து என்பவரின் மகன் திரு. பாலகிருஷ்ணன் ஆகிய மூன்று நபர்களும் மின்கம்பி அறுந்து கிடந்ததை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், செங்கீரை சரகம், அரிமளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி இந்திரா என்பவரின் கணவர் திரு. ராஜேந்திரன் என்பவர் மின்பெட்டியிலிருந்து, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், திருப்பாலைவனம் குறுவட்டம், அரங்கன்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜ் என்பவரின் மகன் திரு. ஆறுமுகம் என்பவர் மின்மாற்றி அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக இரும்பு கம்பி மின்மாற்றியில் பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், அச்சங்குட்டம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மாரியம்மாள் என்பவரின் கணவர் திரு. ஐயங்கண்ணு என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தெற்கு கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மைக்கேல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மின்சார வாரிய ஊழியர் திரு. ராமைய்யன் என்பவரின் மகன் திரு. சதானந்தம் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியினை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியசாமி என்பவரின் மனைவி திருமதி கல்பனா என்ற கனகலட்சுமி என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி லெட்சுமி என்பவரின் மகன் திரு. மகேந்திரன் மற்றும் மருமகள் திருமதி சத்யா ஆகிய இருவரும் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், நைனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதம்பி என்பவரின் மகன் திரு. கருப்பையன் என்பவர் விவசாய நிலத்தில் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், சாத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாதுரை என்பவரின் மகன் திரு. அருள்முகன் என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 25 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த **25 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**